## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.1/2020

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரியா | மதம் | : இந்து |
| த/பெ | : பழனி | ஜாதி | : -- |
| வயது | : 35 | கிராமம் | : மத்தூர் |
| தொழில் | : தனியார் நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

**02.12.2025**

**<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கை யார் தாக்கல் செய்தது என்றால் என் அண்ணன் லாரண்ஸ் தாக்கல் செய்தார். லாரண்ஸ் மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் என் தாத்தா கொள்ளாபுரியும் வழக்கு தாக்கல் செய்தார். எத்தனை நபர்கள் இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் என் தாத்தா கொள்ளாபுரி, அண்ணா லாரண்ஸ், அக்கா பியுலா, அண்ணன் வர்கிஸ் மற்றும் நான் தாக்கல் செய்தோம். யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் ரத்தினம், தனலட்சுமி மீது தாக்கல் செய்தோம். கொள்ளாபுரி உயிருடன் உள்ளாரா என்றால் இறந்துவிட்டார். கொள்ளாபுரி மட்டும்தான் ஆரம்பத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். கொள்ளாபுரி இறந்த பின்புதான் நாங்கள் வாரிசாக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டோம் என்றால் மொத்தம் 5 பேர் சேர்ந்துதான் வழக்கு தாக்கல் செய்தோம்.

2. வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் திருத்தணி பஸ் டிப்போவிற்கு பின்புறம் அம்பேத்கர் நகரில் உள்ளது. வழக்கு சொத்து என்ன என்றால் வீட்டு மனை ஆகும். எனக்கு சொந்த ஊர் மத்தூர் என்றால் சரிதான். வீட்டு மனையில் நீள அகலம் சொல்ல முடியுமா என்றால் 20க்கு 50 ஆகும். மொத்தம் 1000 சதுரடி ஆகும். வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் சொல்ல முடியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனக்கு கணேச ரெட்டியை தெரியுமா என்றால் தெரியாது. கணேச ரெட்டி இதே

சொத்து தொடர்பாக இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.96/2008 தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. **(மேற்படி விவரம் எதிர்வழக்குரையில் கூறப்படாததால் இது தொடர்பாக கேள்வி கேட்க கற்றறிந்த வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது)** எனது சகோதர சகோதரிகள் சாட்சி சொல்ல போகிறார்களா என்றால் என் அண்ணனை விசாரிப்போம். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் நாங்கள் மணிகிளாரியிடம் இருந்து வாங்கினோம். அதற்கு முன்பு உமா காந்தன் என்பவருக்கு சொந்தமாக இருந்தது. உமா காந்தன் எப்போது வாங்கினார் என்றால் ஞாபகமில்லை. மணிகிளாரி எப்போது வாங்கினார் என்றால் 02.12.1985 ஆகும். மணிகிளாரி கிரையம் வாங்கிய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த கிரைய ஆவணத்தில் என்ன நான்கு எல்லை காட்டப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் ஞாபகமில்லை. வழக்கு சொத்திற்கும் 02.12.1985ம் தேதியிட்ட ஆவணத்தில் உள்ள சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 02.12.1985ம் தேதியிட்ட ஆவணத்தில் உள்ள சொத்தின் நான்கு எல்லை எனக்கு ஞாபகமில்லை என்று சொல்லியுள்ள நிலையில் வழக்கு சொத்துதான் அந்த சொத்து என எந்த அடிப்படையில் சொல்கிறேன் என்றால் பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேன்.

4. 02.12.1985ம் தேதியிட்ட ஆவணத்தில் உள்ள சொத்தின் மனை எண் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் **(சாட்சியிடம் வா.சா.ஆ 1 ஆவணம் கொடுக்கப்பட்டது) "20 அடி அகலம் உள்ள ரோட்டிற்கு தெற்கு இன்று கிரையம் பெறும் K.K. முனுசாமியின் 24ம் நம்பர் காலி மனைக்கு மேற்கு, கிரையம் பெற்ற கிருஷ்ணன் 26ம் நம்பர் காலி மனைக்கு கிழக்கு, 22ம் காலி மனைக்கும் சிங்கரி சண்முகம் கிரையம் பெற்ற 13ம் நம்பர் காலி மனைக்கு வடக்கு இதன் மத்தியில் கிழக்கு மேற்கு 20 அடி வடக்கு தெற்கு 50 அடி இதற்கு சரியான பரப்பளவு சுமார் 1000 சதுரடிகள் கொண்ட காலி மனையை..."** என்று உள்ளது. பிராது சொத்து விவரத்தில் மனை எண் 24, 26 ஆகிய மனைகளின் நபர்களின் பெயர் விவரம் காட்டவில்லை என்றால் சரிதான். பிராது சொத்து விவரத்தில் மனை எண் என்ன காட்டப்பட்டுள்ளது என்றால் மனை எண்.25 ஆகும். வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் மனை எண்.25 சொல்லப்பட்டுள்ளதா என்றால் **(சாட்சியிடம் வா.சா.ஆ 1 ஆவணம் கொடுக்கப்பட்டது)** இறுதி பக்கத்தில் **"25ம்**

**நம்பர் காலி மனை"** என சொல்லப்பட்டுள்ளது.

5. மனை எண்.25ன் மனை வரைபடம் (Layout) நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்வதுபோல் மனை வரைபடம் (Layout) எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் மனை வரைபடம் (Layout) தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)